# ஸ்ரீநிவாஸன் சுத்த திருக்கணித சர்வமுகூர்த்த பஞ்சாங்கம்
# தி ருமணப்பொருத்தம் பார்க்கும்போது கடைபிடிக்கவேண்டியவை.

| | |
|---|---|
| 1. | வெறும் பொருத்தம் மட்டும் பார்த்து திருமணம் செய்யக்கூடாது. ஜாதகப்பொருத்தமும், யோகமும் வேண்டும். யோகமில்லா ஜாதகம் உடையவரை மணந்துவிட்டால் எத்தனை பொருத்தம் இருந்தாலும். சரி வராது. ஆக ஜாதகம் யோகம் முக்கியம். |
| 2. | ஒருவருக்கு 7ம் இடம் பாபக்கிரகங்கள் இருந்தால் மற்றவருக்கு பாபக்கிரகம் இருக்கவேண்டும் அல்லது பாபக்கிரகப் பார்வை வேண்டும். ஆக பாபக்கிரகம் 7ம் இடம் இருக்கவேண்டிய அவசியமில்லை. பார்வை மட்டுமே கூடப் போதுமானது. |
| 3. | மூலம் 1ம் பாதம் மட்டும் மாமனாருக்கு ஆகாது. மற்ற மூலம் 2, 3, 4ம் பாதங்கள் தோஷமில்லை. ஞாயிற்றுக்கிழமை பிறந்தால் மட்டும் 4 பாதங்களும் தோஷம். இந்த தோஷம் பெண் ஜாதகத்திற்க்கு மட்டுமே. ஆண் ஜாதகத்திற்க்கு அல்ல. சந்திரன், குரு, சுக்கிரனோடு சேர்ந்தாலும், பார்க்கப்பட்டாலும் மூலம் நக்ஷத்திர தோஷம் கிடையாது. |
| 4. | ஆயில்யம் 1ம் பாதம் மட்டும் மாமியாருக்கு ஆகாது. மற்ற ஆயில்யம் 2,3,4ம் பாதங்கள் தோஷமில்லை. இதுவும் பெண் ஜாதகத்திற்க்கு மட்டும்தான். |
| 5. | விசாகம் 4ம் பாதம் மட்டும் மைத்துனருக்கு ஆகாது. மற்ற விசாகம் 1, 2, 3 ம் பாதங்கள் தோஷமில்லை. இதுவும் பெண் ஜாதகத்திற்க்கு மட்டும்தான். |
| 6. | கேட்டை 1ம் பாதம் மட்டும் மூத்த மைத்துனருக்கு ஆகாது. மற்ற கேட்டை 2, 3, 4ம் பாதங்கள் தோஷமில்லை. இதுவும் பெண் ஜாதகத்திற்க்கு மட்டும்தான். |
| 7. | எந்த நக்ஷத்திர தோஷமும் ஆண் ஜாதகத்திற்குக்கிடையாது. *மேலும் சந்திரன், குரு அல்லது சுக்கிரனோடு சேர்ந்தாலும், அவர்களால் பார்க்கப்பட்டாலும், பெண்ணுக்குக் கூட மூலம், ஆயில்யம், விசாகம், கேட்டை நக்ஷத்திர தோஷங்கள் கிடையாது.*<br><br>இந்த விஷயம் தெரியாமல் சில பெற்றோர்களும் பெண் பிள்ளைகளின் வாழ்க்கையை பாதிக்கச்செய்கின்றனர். இது இளைய சமுதாயத்திற்க்கு செய்யும் பெரிய பாவமாகும். ஆகவே பொதுமக்களும் ஜோதிடர்களும், இவ்விஷயங்களில் அனாவசியமாக குழப்பம் செய்து பெண்கள் வாழ்க்கையைப்பாழ்படுத்தவேண்டாம். |
| 8. | செவ்வாய் தோஷ விவரம் பஞ்சாங்கத்தின் 78-ம் பக்கத்தில் மிகத் தெளிவாக கொடுத்திருக்கின்றோம். அதன்படி பார்த்தால் 100 க்கு 10 பேருக்கு கூட செவ்வாய் தோஷம் கிடையாது. இது விஷயமாகவும். குழப்பமடைந்து திருமணத்தை நிறுத்த வேண்டாம். நன்கு படித்து ஆராய்ந்து முடிவெடுக்கவும். |
| 9. | திருமணமாகாத பெண்கள் வீட்டின் வடமேற்கு அறையில் கிழக்கே தலைவைத்துப் படுத்தால் வாஸ்து சாஸ்திரப்படி விரைவில் திருமணம் நடக்கும். |

உபயம்- குலாலர் இராமலிங்கம், பாக்கியம் டெக்ஸ்டைல்ஸ்.
போன்- கடை 044-5587 4464 வீடு-044-2573 1689
*26/56c Sannadhi Street, Tiruvotriyur, Chennai - 600019*